1992 மார்ச் 9]

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டு அரசுகளுக்கிடையே இருக்கின்ற பிரச்சினை. ஆகவே, அந்த இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கின்ற பிரச்சினை என்கின்ற காரணத்தினாலே அவைகளை முறையாகப் பேசி, சுமுகமான முறையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று, இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களினுடைய மேலான முயற்சியின் பேரிலே இன்றைக்குத் துரிதமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். வெகு விரைவிலே, கேரள அரசோடு இணக்கமான ஒரு முடிவை ஏற்படுத்தி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 129, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

129—

நிலக்கோட்டை தொகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம்.

*4249 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நிலக்கோட்டை தொகுதி, ராமநாயக்கன்பட்டி, ரெங்கப்ப நாயக்கன்பட்டி இரண்டையும் இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக முயற்சித்த இந்தத் திட்டம், இப்பொழுதாவது—நம்முடைய மாண்புமிகு மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுடைய காலத்திலே இதற்கு "ஆம்"

என்று சொன்ன பதிலிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணத்தில் எஸ்டிமேட் தயார் செய்யப் பட்டுள்ளது? இந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்பட இருக் கிறது என்பதை அறிவிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் வலது கரையி லுள்ள ரெங்கப்ப நாயக்கன் பட்டியையும், இடது கரையில் உள்ள ராமக்க நாயக்கன் பட்டியையும் இணைக்கும் வகையில் வைகை ஆற்றில் பாலம் கட்டும்படி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரி இருக்கின்றார்கள். அது ஏறத்தாழ 125 மீட்டர் நீளத்திலே அந்தப் பாலம் கட்டப்பட வேண்டும். உயர் மட்டப் பாலம் அமைக்க வேண்டும் என்றால் ஏறத்தாழ ஒன்றரை கோடி ரூபாய் செலவு ஆக வேண்டும். தாம்போகி கட்ட வேண்டுமென்றால் நாற்பது இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, அந்த இடத்திலே தாம்போகி கட்டி னால் போதும் என்ற நிலையை ஏற்படுத்தி, அதற்கு மத்திய சென்ட்ரல் ரோடு ஃபண்டிலே அதைச் சேர்த்து, இன்றைக்கு அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக் குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாற்பது இலட்சத்திலே கட்டினால் கூடப் போதுமானதுதான். அதை சென்ட்ரல் ரோடு ஃபண்டிலே சேர்ப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இதற்கு சென்ட்ரலிலே இருந்து சேங்க்ஷன் செய்யப்பட்டு அவர்கள் பணம் ஒதுக்க வேண்டுமா, அல்லது நாமே—நம்முடைய அரசே இந்தப் பணத்தை ஒதுக்கி இந்த வேலை மேற்கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பாலங்களைக் கட்டுகின்ற நேரத் திலே நாம் இரண்டு திட்டங்களை வைத்து இருக்கின்றோம். ஒன்று, நம்முடைய அரசின் சார்பிலே பார்ட்—2 ஸ்கீம் என்ற ஸ்கீமிலே இன்றைக்குப் பாலங்கள், சாலைகளை—முக்கியமான திட்டங்களை எடுத்துக் கொள்கிறோம். அதைப்போல மத்திய அரசின் உதவியோடு, சென்ட்ரல் ரோடு ஃபண்ட் ஸ்கீம் என்ற அந்த நிதியின் சார்பிலே வேலைகளை எடுத்துக் கொண்டிருக்கி றோம். சில வேலைகளை நம்முடைய திட்டத்தின் கீழ் எடுத்து கொண்டு செய்கிறோம். சில வேலைகளை மத்திய அரசினுடைய திட்டத்தின் கீழே எடுத்துக் கொண்டு செய்கிறோம். இந்த வேலையைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய மத்திய தொகுப்பு நிதியிலேயிருந்து கொடுக்கின்ற இந்த சென்ட்ரல் ரோடு ஃபண்ட்

1992 மார்ச் 9]

ஸ்கீம் என்ற அளவிலே இந்தத் திட்டத்திலே சேர்த்து இருக்கிறோம். ஆகவேதான், அந்த ஒப்புதல் வந்தவுடன் இந்த வேலை ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் ; இந்த அவைக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 130 திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

130—

மலட்டாற்றில் ஓடுபாலங்கள் கட்டும் திட்டம்.

*5178—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடிக்கு அருகிலுள்ள கொம்பூதிச்சாலை மற்றும் எம். கரிசல்குளம் சாலையை குறுக்கிடும் மலட்டாற்றில் இரண்டு ஓடுபாலங்கள் கட்ட செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழக அரசினுடைய பகுதி—2 திட்டத்திற்கு அங்கிருந்து எடுத்து கருத்துரு அனுப்பப்பட்டு, நிதிநிலை பற்றாக்குறையின் காரணமாக நிலுவையில் போடப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்கள் பிரதிநிதி ஒரு திட்டத்தைப் புதுப்பித்து அரசுக்கு அனுப்புவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள இயலாது. ஆகவே ஒரு ஆண்டு பகுதி—2 திட்டத்திற்கு இந்தத் திட்டத்திற்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று சொன்னால் மறு ஆண்டுக்கு அந்த திட்டத்தைத் துறையே தன்னிச்சையாக, தானே பரிந்துரை செய்வதால்தான் அந்தக் காரியங்கள் நடைபெற